www.Padasalai.Net www.CBSEtips.in

MDQ

**11** - ஆம் வகுப்பு

# காலாண்டுத் தேர்வு – 2022

## வணிகவியல்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ள விடைகளிலிருந்து சரியான ஒன்றைத் தேர்ந்தெடுத்து விடையளிக்கவும் . 20 x 1 = 20

1. பாண்டியர் ஆட்சிக்காலத்தில் பொருட்கள் விற்பனை செய்யும் இடத்திற்கு -------------- என்று பெயர்.
அ) அங்காடி ஆ ) சந்தை இ ) நாளங்காடி ஈ ) அல்லங்காடி

2. மருத்துவர் தொழில் என்பது --------------
அ ) வேலைவாய்ப்பு ஆ ) தொழில் இ ) சிறப்புத்தொழில் ஈ ) தனியார் வணிகம்

3. அதிகளவு அபாயத்தைக் கொண்டது .
அ ) உற்பத்தித் தொழில் ஆ ) வணிகம் இ ) வியாபாரம் ஈ ) இவை அனைத்தும்

4. தனியாள் வணிகத்தின் மிகப்பெரிய குறைபாடு
அ ) வரையறு பொறுப்பு ஆ ) வரையறாப் பொறுப்பு
இ ) அமைப்பது எளிமை ஈ ) விரைவான முடிவு

5. இந்துக் கூட்டுக் குடும்பத்தில் ஒருவர் எவ்வாறு உறுப்பினராகிறார்?
அ ) உடன்படிக்கையால் ஆ ) பிறப்பால்
இ ) முதலீட்டின் அடிப்படையில் ஈ ) நிர்வாகத்தின் அடிப்படையில்

6. நிறுமத்தின் இயக்குனரவையை கீழ்க்கண்டவற்றுள் யார் தேர்ந்தெடுக்கிறார்கள் ?
அ ) கடனீந்தோர் ஆ ) கடனாளர் இ ) கடனீட்டு பத்திரதாரர் ஈ ) பங்குதாரர்கள்

7. புதிய வகை நிறுமமாக"ஒரு நபர் நிறுமம் " -------- சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது .
அ ) 1956 ஆ ) 1952 இ)2013 ஈ)2015

8. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் ஒப்பிட்டு சரியான விடையைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டை கொண்டு தெரிவிக்கவும்.

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| நுகர்வோர் கூட்டுறவு சங்கம் | 1 குறைந்த கால நிதி உதவி |
| உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் | 2.பண்டகக் காப்பு வசதி |
| கூட்டுறவு சந்தையிடுகை சங்கம் | 3.சந்தையிடுகை சங்கம் |
| கூட்டுறவு கடன் சங்கம் | 4.தச்சு தொழிலாளர் கூட்டுறவு சங்கம் |

அ ) 4,3,2,1 ஆ) 1,2,3,4 இ) 3,4,2,1 ஈ) 2,1,3,4

9. இந்தியாவின் மைய வங்கி என்பது --------------- ஆகும்
அ ) பி.ன். பி ஆ )எஸ் .பி .ஐ இ ) ஐ .சி .ஐ .சி .ஐ . ஈ ) ஆர் ,பி .ஐ

10. உள்ளூர் பகுதி வங்கிகள் ஊக்குவிப்பது
அ ) கிராம சேமிப்பு ஆ ) வணிகச் சேமிப்பு இ ) தொழிற்துறை வளர்ச்சி ஈ) விவசாய வளர்ச்சி

11. இந்தியாவின் மிகப் பெரிய வணிக வங்கி
அ ) ஐ .சி .ஐ .சி .ஐ ஆ ) எஸ் .பி .ஐ . இ ) பி.ன். பி . ஈ ) ஆர் ,பி .ஐ

12. கீழ்க்கண்டவற்றுள் எது சரியான இணை ?
i) NEFT -- தேசிய மின்னணு நிதி பரிமாற்றம் ii) RTGS -- உண்மை நேர மொத்த தீர்வக அமைப்பு
iii) ECS --- மின்னணு தீர்வக சேவைகள் iv) CORE --- கூட்டு இணைப்பு வங்கியியல் தீர்வுகள்
அ ) (i) & (iii) ஆ ) (i),(ii) & (iii) மட்டும் இ ) (ii), (iii), and (iv) மட்டும் ஈ ) மேற்கண்ட அனைத்தும்

13. பிணைய அடிப்படையில் பொருட்கள் பாதுகாப்பதற்காக அரசால் உரிமம் வழங்கப்பட்ட பண்டகக் காப்பகங்கள் ------- ஆகும்.
அ ) பிணைப் பண்டகக் காப்பகங்கள் ஆ) குளிர் பதன இ) பொது ஈ ) மேற்கூறிய அனைத்தும்

14. வான் வழி அனுப்பீட்டு ரசீது ------ அசல் பாகங்களில் தயாரிக்கப்படுகிறது .
அ ) ஒன்று ஆ ) இரண்டு இ ) மூன்று ஈ ) நான்கு

15. கீழ்க்கண்டவற்றுள் காப்பீடு ஒப்பந்தத்திற்கு பொருந்தாதது எது ?
அ ) தன்னிச்சை ஒப்பந்தம் ஆ ) நிபந்தனை ஒப்பந்தம்
இ ) ஈட்டுறுதி ஒப்பந்தம் ஈ ) பகிர்ந்தளித்தல்

16. பெயர்ச்சியியலின் முக்கிய நன்மை
அ ) உற்பத்தி மேம்பாடு ஆ ) செலவுகளைக் குறைத்தல்
இ ) இலாபம் ஈட்டுதல் ஈ ) பண்டகக்காப்பு



Scanned by TapScanner
Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

17. சமூகப் பொறுப்புணர்வு வணிகத்தில் ------ யில் பண்டங்கள் வழங்கப்படுகிறது
அ ) அதிக விலை ஆ ) குறைந்த விலை இ ) நியாயமான விலை ஈ ) மிதமான விலை
18. தலைமை நிர்வாகத்தின் பங்கு என்பது அதன் முழு அமைப்பு எதை நோக்கி வழி நடத்த வேண்டும் ?
அ ) பொது நடத்தை ஆ ) அமைப்பு நடத்தை
இ ) நேர்மையான நன்நெறி நடத்தை ஈ ) தனிநபர் நடத்தை
19. கடன் பத்திரதாரர்கள் ஒரு நிலையான ---------விகிதம் பெறத்தகுதியுடையவர்கள் .
அ ) பங்காதாயம் ஆ ) இலாபம் இ ) வட்டி ஈ ) இவை எதுவும் இல்லை
20. வைப்பு இரசீது வெளியீடு இதன் தேவை அதிகரிப்பை அடிப்படையாகக் கொண்டது
அ) பன்னாட்டு சந்தை ஆ) உள்ளூர் சந்தை
இ) தற்போதைய பங்குதாரர்கள் ஈ) மேற்கண்ட அனைத்தும்

## பகுதி - II

**குறிப்பு :எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**அவற்றில் வினா எண் 30 க்கு கட்டாயமாக விடையளிக்கவும் .** 7 x 2 = 14

21. வணிகத்தை வரையறு .
22. கூட்டுறுசாரா பேரளவு நிறுவனங்களைப் பற்றிச் சுருக்கமாக கூறு .
23. நிறுமம் வரைவிலக்கணம் தருக.
24. கடன் கூட்டுறவு விளக்குக.
25. வெளிநாட்டு வங்கிகள் என்றால் என்ன ?
26. தானியங்கி பணம் வழங்கும் அட்டை பற்றி நீவிர் அறிவது யாது ?
27. போக்குவரத்து -வரையறு.
28. நெறிமுறை என்றால் என்ன ?
29. வைப்பு இரசீதுகள் என்றால் என்ன ?
30. பின்வருவனவற்றிற்கு முழு விரிவாக்கம் தருக.RRB, NHB, SFB, LAB.

## பகுதி – III

**குறிப்பு : எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**அவற்றில் வினா எண் 40 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 7 x 3 = 21

31. மருவூர்ப்பாக்கம் மற்றும் பட்டினப்பாக்கம் -----விளக்குக .
32. இந்துக் கூட்டுக் குடும்பத்தொழிலின் சிறப்பியல்புகள் ஏதேனும் மூன்றை விவரி .
33. இந்தியப் பன்னாட்டு நிறுமத்திற்கு ஏதேனும் மூன்று உதாரணங்கள் தருக .
34. இந்திய ரிசர்வ் வங்கியின் தோற்றம் பற்றிக் கூறு.
35. மின்னணு வங்கியியல் என்றால் என்ன?
36. கப்பல் இரசீது என்றால் என்ன ?
37. காப்பீடு வரையறு .
38. சமூகப் பொறுப்புணர்வு என்பதன் பொருளுக்கான இலக்கணம் தருக.
39. அந்நிய நேரடி முதலீட்டின் ஏதேனும் மூன்றுதீமைகளை விவரி.
40. வங்கி மேல்வரைப்பற்று -குறிப்பு வரைக .

## பகுதி - IV

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7x5=35

41. வணிகத்தின் தடைகளை விவரி. *(அல்லது)*
இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு பணிகளை விவரி. *(அல்லது)*
42. சிறுகுறிப்பு வரைக . அ )பகுப்பாய்வு உற்பத்தித் தொழில் ஆ ) மரபுசார் தொழில்கள்
இ ) கட்டுமானத் தொழில்கள் *(அல்லது)* பண்டகக்காப்பின் பல்வேறு வகைகளை விவரி.
43. கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கங்கள் யாவை? *(அல்லது)*
தொடர் வண்டிபோக்குவரத்தின் நன்மைகளை விவரி.
44. செயல்முறை விதிகளில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை? *(அல்லது)*
காப்பீட்டின் கோட்பாடுகளை விவரி .
45. கூட்டுறவின் கொள்கைகள் என்ன? *(அல்லது)*
தொழில், சிறப்புத் தொழில் மற்றும் வேலைவாய்ப்பு - ஓர் ஒப்பீடு செய்க.
46. பன்னாட்டு நிறுமத்தின் தீமைகளை விவரி. *(அல்லது)*
பண்டக சான்றாணை மற்றும் பண்டக இரசீது இடையே மூன்று வேறுபாடுகளை கூறுக.
47. துறைவாரி நிறுவனங்களின் நன்மைகளை விவரி. *(அல்லது)*
உலகளாவிய வைப்பு இரசீதிற்க்கும் அமெரிக்க வைப்பு இரசீதிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?



Scanned by TapScanner
Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**+1 வணிகவியல் காலாண்டுத் தேர்வு செப் - 22**

**சரியான விடை**

1. (அ) அங்காடி
2. (இ) சிறப்புத் தொழில்
3. (அ) உற்பத்தித் தொழில்
4. (ஆ) வரையறாப் பொறுப்பு
5. (ஆ) பிறப்பால்
6. (ஈ) பங்குதாரர்கள்
7. (இ) 2013
8. (இ) 3,4,2,1
9. (ஈ) ஆர்.பி.ஐ
10. (அ) கிராம சேமிப்பு
11. (ஆ) எஸ்.பி.ஐ.
12. (ஈ) மேற்கண்ட அனைத்தும்
13. (அ) பிணைப் பண்டகக் காப்பகங்கள்
14. (இ) மூன்று
15. (அ) தன்னிச்சை ஒப்பந்தம்
16. (ஆ) செலவுகளைக் குறைத்தல்
17. (இ) நியாயமான விலை
18. (இ) நேர்மையான நன்னெறி நடத்தை
19. (இ) வட்டி
20. (அ) பன்னாட்டு சந்தை

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. வணிகத்தை வரையறுக்க** எவ்லின் தாமஸ் அவர்களின் கூற்றுப்படி "வணிக நடவடிக்கைகள் பொருட்கள் வாங்குதலும், விற்றலும் முடிவுற்ற பொருட்கள் பரிமாற்றமும் கொண்டதே ஆகும்."

**22. கூட்டுரு சாரா பேரளவு நிறுவனங்களைப் பற்றி சுருங்கக் கூறுக.** கூட்டுரு சாரா நிறுவனங்கள் சட்டப்படி பதிவு செய்ய வேண்டிய கட்டாயமில்லை. இதில் உரிமையும் மேலாண்மையும் ஒருவரையே சாரும். எகா:- தனியாள் வணிகம், கூட்டாண்மை நிறுவனம், இந்துக் கூட்டுக் குடும்பம்.

**23. நிறுமம் வரைவிலக்கணம்:** இந்திய நிறுமச் சட்டம் 2013, பிரிவு-2ன் (20)படி "நிறுமம் என்பது நீடித்த வாழ்வுடனும், நிலைபேற்றுத் தொடர்ச்சியுடனும், பொது முத்திரையுடன் கூடிய சட்டத்தால் உருவாக்கப்பட்ட புனைவு நபர்."

**24. கடன் கூட்டுறவு** உறுப்பினர்களுக்கு குறுகிய கால கடன் வழங்குதலில், தேர்ச்சி பெற்ற சங்கம் கடன் சங்கம் ஆகும். வேளாண்மையினர், கை வினைஞர்கள், தொழில் புரிபவர்கள், ஊதியம் ஈட்டுகிறவர்கள் போன்றவர்களுக்கு, கடனளிக்கும் உன்னத பணியை கடன் சங்கங்கள் செய்து வருகின்றன. வங்கிகளிடம் இருந்து கடன் பெற முடியாமல், உள்நாட்டு நபர்களிடமிருந்து அதிக வட்டியில் கடன் வாங்கி சீரழியும் பலரை, குறைவான வட்டியில் கடன் தந்து, அவர்களை இடைநிலையர் பிடியிலிருந்து மீட்டு வரும் உன்னதமான சங்கம், கடன் சங்கங்கள் ஆகும். கடன் சங்கங்கள், வேளாண் கடன் சங்கமாகவோ அல்லது வேளாண் சாரா சங்கமாகவோ இருக்கலாம்.

**25. வெளிநாட்டு வங்கிகள்:** வெளிநாட்டில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தையும், இந்தியாவில் கிளை அலுவலகத்தையும் கொண்ட வங்கிகள், வெளிநாட்டு வங்கிகள் என்று அழைக்கப்படுகின்றன.

**எகா:-**

| | |
|---|---|
| பாங்க் ஆஃப் அமெரிக்கா | - அமெரிக்கா |
| பார்க்லேஸ் பாங்க் | - இங்கிலாந்து |
| டியுட்செபாங்க் | - மேற்கு ஜெர்மனி |

**26. தானியங்கி பணம் வழங்கும் அட்டை:** தானியங்கி பணம் வழங்கும் அட்டையைப் பயன்படுத்தி இந்தியாவில் எங்கிருந்தும் எந்தவொரு நேரத்திலும் பணத்தை எடுக்க முடியும். இயந்திரம் வாடிக்கையாளர்களின் கணக்கில் இருக்கும் மீதி இருப்பு தொகையையும் காட்டுகின்றன.

**27.போக்குவரத்து:** கே.கே.செக்சேனாவின் கூற்றுப்படி " ஓர் இருட்டறையில் மெழுகுவர்த்தியின் ஒளி பரவுவது போல, போக்குவரத்து அந்தந்த பகுதிகளில் தனது சேவையை ஆற்றுகிறது"

**28. நெறிமுறை:** தொழிலின் உரிமையாளர்கள், நிர்வாகிகள் மற்றும் தொழில் செய்பவர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுங்குணர்வு தரமே, வியாபார நன்னெறி என்று இலக்கணம் தரப்பட்டுள்ளது. இத்தகைய தரநிலைகள் தொழில் செய்பவர்களின் நன்னடத்தையை தீர்மானிக்கின்றன. மேலும் தொழில் நெறி முறைகள் வணிக நடத்தைகளை வெளிப்படுத்துகிறது.

**29. வைப்பு இரசீதுகள்:** ஒரு வைப்புத் தொகை ரசீது என்பது வெளிநாட்டு நிறுவனத்தின் நேர்மை பங்குகள் வாங்கியதற்கு சான்றாக வங்கியால் வழங்கப்படும் ஒரு மாற்று முறை ஆவணமாகும். அயல் நாட்டிலிருந்து பெருமளவு முதலீட்டை திரட்டுவதற்காக அவைகள் வெளியிடப்படுகின்றன.

**30.முழு விரிவாக்கம்:**

RRB – Regional Rural Bank வட்டார கிராமிய வங்கிகள்

NHB – National Housing Bank தேசிய வீட்டுவசதி வங்கிகள்

SFB – Small Finance Bank சிறிய நிதி வங்கிகள்

LAB – Local Area Bank உள்ளூர் பகுதி வங்கிகள்

**ஏதேனும் 7வினாக்களுக்கு விடையளி : 7X3=21**

**31. மருவூர்பாக்கம் மற்றும் பட்டினப்பாக்கம்** - பூம்புகார் போன்ற பெரிய நகரத்தில் மருவூர்பாக்கம் (உள்நாட்டு நகரம்) மற்றும் பட்டினப்பாக்கம் (கடலோர நகரம்) ஆகியவை உணவுப் பொருள்கள் மற்றும் இதர பல்பொருள்கள் வியாபாரம் செய்யக் கூடிய இடங்களாகும். மேலும் அங்கு அங்காடிகளையும், பெரு வியாபாரிகளையும் கொண்டிருந்தன.



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**32. இந்துக் கூட்டுக் குடும்பத் தொழிலின் சிறப்பியல்புகள் ஏதேனும் மூன்றினை விவரி**

**இந்துச் சட்டத்தின் படி கட்டுப்படுத்துதல்:-**
இந்து கூட்டுக் குடும்ப வியாபாரம், இந்து சட்டத்தின் படி கட்டுப்படுத்தப்பட்டு மேலாண்மை செய்யப்படுகிறது. இந்து சட்டத்தின் 2 பிரிவுகள் தயாபாகா, மிட்டக்சரா

**மேலாண்மை:-**இந்து கூட்டுக் குடும்ப வியாபாரத்தை கட்டுப்படுத்துவது மற்றும் மேலாண்மை செய்வது "கர்த்தா" அல்லது "மேலாளர்" ஆவார். அக்குடும்பத்தில் உள்ள அனைவரும் கர்த்தாவின் மேல் முழு நம்பிக்கை உள்ளவர்கள். கர்த்தாவே வெளியாட்களுடன் உடன்படிக்கை செய்ய உரிமை பெற்றவர்.

**பிறப்பால் உறுப்பினர்:-**
இக்குடும்பத்தில் உறுப்பினராக அக்குடும்பத்தில் ஒருவராக பிறக்க வேண்டும். அக்குடும்பத்தில் பிறக்கும் ஆண் குழந்தையே குடும்ப உறுப்பினராக முடியும். உறுப்பினராக எவ்வித சம்மதமோ அல்லது உடன்படிக்கையோ தேவையில்லை

**33. இந்திய பன்னாட்டு நிறுவனங்களின் பெயர் (3)**

1. பாட்டா - பாட்டா இந்தியா
2. கோல்கேட் பாமொலிவ் -கோல்கேட் இந்தியா
3. சோனி கார்ப்பரேசன் -சோனி இந்தியா
4. சுசூகி - மாருதி சுசூகி
5. டைமெக்ஸ் டைமெக்ஸ் வாட்ச்

**34. இந்திய ரிசர்வ் வங்கியின் தோற்றம்:** இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியா பண வெளியீடு மற்றும் மைய வங்கிக்கான பிற கடமைகளை ஆற்றி வந்தது.
1926 ஆம் ஆண்டில் ஹில்டன் - யங் ஆணையம் அல்லது இந்திய நாணய மற்றும் நிதியியல் தொடர்பான இராயல் ஆணையம் ஒரு மைய வங்கி உருவாக்கப் பரிந்துரைத்தது.
அதன் விளைவாக, இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் 1934 இல் உருவாக்கப்பட்டு, இந்திய ரிசர்வ் வங்கி ஏப்ரல் 1, 1935 முதல் செயல்பாட்டிற்கு வந்தது.
இந்திய ரிசர்வ் வங்கியின் ரூ.5 கோடி மூலதனம் ரூபாய் 100 மதிப்புள்ள முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளால் உருவாக்கப்பட்டது.
அதன் தலைமை அலுவலகம், கொல்கத்தாவில் இருந்தது பின்னர் 1937இல் மும்பைக்கு மாற்றப்பட்டது.
இந்திய ரிசர்வ் வங்கி 1947 வரை பர்மா நாட்டிற்கும் ஜீன் 1948 வரை பாகிஸ்தான் நாட்டிற்கும் மைய வங்கியாகச் செயல்பட்டது.

**35. மின்னணு வங்கியியல்:** தற்போது அனைத்து வங்கிகளும் வங்கி பரிவர்த்தனைகான நேரம் மற்றும் செலவைக் குறைத்து, வாடிக்கையாளர்களுக்கு வசதியான வங்கி சேவைகளை இணையம் மூலம் வழங்குகின்றன. வரைவோலைகள், காசோலைகள் மற்றும் காகித அடிப்படையிலான நிதி பரிமாற்றங்களுக்கு இந்தச் சேவை ஒரு மாற்று ஆகும்.

**36.கப்பல் இரசீது:** ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை உள்ளடக்கிய ஒரு ஆவணமாகும். இது கப்பல் நிறுவனத்தால் வழங்கப்படுவது மற்றும் கப்பல் மாலுமியால் கையொப்பபடப்பட்டிருக்கும். கப்பலில் வைக்கப்பட்ட பொருட்களை திரும்ப பெற்றுக் கொள்வதற்காக விவரிக்கப்பட்ட ஒப்புக்கொள்ளும் இரசீதாகும்.

**37. காப்பீட்டின் வரைவிலக்கணம்:** ஜான் மொர்ஜ் என்பவரது கூற்றுப்படி "தனி ஒருவருக்கு ஏற்படும் இடரை, பலர் ஒன்றிணைந்து தங்களது தோள்களில் பகிர்ந்து கொள்ளும் திட்டமே காப்பீடு" ஆகும்.

**38. சமூகப் பொறுப்புணர்வு என்பதன் பொருளுக்கான இலக்கணம் தருக.**
**பீட்டர் எ.்.ப் டிரக்கர்** அவர்களின் கூற்றுப்படி "சமுதாய பொது நலன் மேம்பாடு கருதி, உரிய நபர், சமுதாய நம்பிக்கைக்குரிய அடிப்படை மேன்மை, சமுதாய ஒற்றுமை உறுதித் தன்மை மற்றும் நிலைத்தன்மை போன்றவற்றில் பங்களிப்பை ஏற்படுத்துவது ஆகும்.

**39. அந்நிய நேரடி முதலீட்டின் ஏதேனும் மூன்று தீமைகள்**
உள்நாட்டு வளங்களைத் தீர்த்தல், அதிகப்படியான முதல் வெளியேறுதல், தொழில் நுட்பத்தை மாற்றாமை, உழைப்பு சுரண்டுதல், ஏகாதிபத்திய சூழலை உருவாக்குதல்

**40. வங்கி மேல்வரைப் பற்று:-** என்பது வங்கியில் ஒரு குறிப்பிட்ட வரம்பிற்கு உட்பட்டு, ஒரு வாடிக்கையாளரின் வங்கி நடப்பு கணக்கில், வரவில் இருக்கும் தொகையை விட அதிகமான தொகையை எடுத்துப் பயன்படுத்திக் கொள்ளும் ஒரு ஏற்பாடு ஆகும். எவ்வளவு தொகை கடனாகப் பெறப்படுகிறதோ அதற்கு மட்டுமே வட்டி வசூலிக்கப்படுகிறது.

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35**

**41.அ) வணிகத்தின் பல்வேறு தடைகள்**
**ஆள்சார் தடை:-** பொருள்கள் தேவைப்படும் நபர்களையும், நியாயமான விலையில் வாங்க விரும்புபவர்களையும் தொடர்பு கொள்ள முடியாத நிலை உள்ளது. உற்பத்தியாளரும் நுகர்வோரும் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்பட வாய்ப்பே கிடையாது. இக்குறைபாடே ஆள்சார் தடை எனப்படும். வணிகத்தின் முக்கிய அங்கமாகத் திகழும் வியாபாரம் இக்குறைபாட்டை நீக்க உதவுகிறது.



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**இடத்தடை:-** பொருட்கள் ஒரு இடத்தில் உற்பத்தி செய்யப்பட்டு, நாடு முழுவதும் மற்றும் உலகம் முழுவதும் உள்ள நுகர்வோர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. உற்பத்தியாளரையும், நுகர்வோரையும் பிரிக்கும் தூரமே இடத்தடை எனப்படுகின்றது. இத்தடை போக்குவரத்தின் மூலம் நீக்கப்படுகின்றன.

**காலத்தடை:-** ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் ஆண்டு முழுவதும் தேவை ஏற்படும். தேவையைக் கணக்கில் கொண்டு பேரளவு உற்பத்தி செய்து நுகர்வோரிடம் விற்கத் தயார் நிலையில் பொருட்களை வைத்திருக்க வேண்டும். பண்டகக் காப்பகம் காலத்தடையை நீக்குகிறது.

**இடர் மற்றும் பொருட்கள் தரம் கெடாமல் இருக்கத்தடை:-**பொருட்கள் முறையாக சிப்பம் கட்டுதல் மற்றும் நவீன குளிர்சாதன வசதி கொண்ட பண்டகசாலைகள் ஆகியவற்றால் பொருட்களின் தரம் குறையாமல் பாதுகாக்கப்படுகிறது. பொருட்கள் பூச்சிகள், எலிகள் ஆவியாதல் போன்றவைகளுக்கு எதிராக பாதுகாக்கப்படுகின்றன.

**நட்ட இடர்பாட்டுத்தடை:-** ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இருப்பு வைக்க பொருட்களைக் கொண்டு செல்லும் போது ஆட்களாலும், இயற்கையாலும் நட்டம் ஏற்பட வாய்ப்பு உண்டு. இவ்விடர் தீக்காப்பீடு, கடல்சார் காப்பீடு மற்றும் பொதுக்காப்பீடு மூலம் நட்டம் நிவர்த்தி செய்யப்படுகின்றன.

**அறிவுசார் தடை:-** சந்தை நிலவரங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியாததால் நுகர்வோர் தரமான பொருட்களை நியாயமான விலையில் வாங்க இயலாமல் போய்விடக்கூடும். இது அறிவுசார் தடை எனப்படும். நல்ல விளம்பரம் மற்றும் விற்பனையாளர் சேவைகள் மூலம் இத்தடை நீக்கப்படுகின்றன.

**பண்டப்பரிமாற்றத் தடை:-** பணம் பண்டப்பரிமாற்றத்தில் முக்கிய பங்கு வகுக்கிறது. பொருட்களுக்கு உண்டான சரியான விலையை செலுத்துவதன் மூலம் எந்தவொரு தயாரிப்பு அல்லது சேவைகளையும் வாங்குதல் மற்றும் விற்பது ஆகியவற்றை செயல்படுத்துகிறது.

**நிதித்தடை:-** உற்பத்தியாளர்களுக்கு, வர்த்தகர்களுக்கு அவசியமான நேரத்தில் தேவையான நிதி கிடைப்பதில்லை. நிதி ஆதாரம் குறைந்து, வியாபாரம் தடைப்படுதலே நிதித்தடை எனப்படுகின்றது. இத்தடை, வங்கி மற்றும் நிதி நிறுவனங்களால் நீக்கப்படுகின்றன.

**41.ஆ) இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு பணிகள்:**

**உலக நிதி நிறுவனங்களில் இந்தியாவின் பிரதிநிதி:-** சர்வதேச வங்கியியல் தரநிலைகளுக்கிணங்க நல்லிணக்கம் மற்றும் நிலைத்தன்மையைப் பராமரிப்பதற்காக இந்திய ரிசர்வ் வங்கியானது, வங்கியியல் மேற்பார்வை பேஸல் குழுவுடன் 1997 ஆம் ஆண்டு முதல் இணைந்து செயல்பட்டு வருகிறது. பன்னாட்டு மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டு வங்கி மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தில் டிசம்பர் 27, 1945 முதல் இந்திய அரசின் பிரதிநிதியாக இந்திய ரிசர்வ் வங்கி இருந்து வருகிறது.

**இந்திய வங்கிகளின் கட்டமைப்பின் ஒழுங்குப்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல்:-** நாட்டில் உள்ள அனைத்து வங்கிகளையும் ஒழுங்குபடுத்த விரிவான வழிகாட்டுதல்களை, இந்திய ரிசர்வ் வங்கி வகுத்து வழங்கு வருகிறது. இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் 1934 மற்றும் வணிக வங்கிகளின் ஒழுங்கு முறைச் சட்டம் 1949 ஆகியவற்றின் கீழ் வணிக வங்கிகளுக்கு உரிமம் வழங்குதல், கட்டுப்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல் போன்ற அதிகாரங்களை ரிசர்வ் வங்கி கொண்டுள்ளது. எந்த வணிக வங்கிகளையும் ஆய்வு செய்யவும், வங்கிகளிடமிருந்து தேவையான தகவல்களைக் கேட்டுப் பெறவும் அதிகாரம் கொண்டிருக்கிறது.

**பணவியல் உச்ச நிலை அதிகாரி:-** விலைவாசி நிலைத் தன்மையையும், பணவீக்கப் போக்குகளையும் ஒழுங்குப்படுத்துதல் மற்றும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் நாட்டின் பணவியல் கொள்கையை இந்திய ரிசர்வ் வங்கி தீர்மானிக்கிறது. இது விவசாயத்திற்கான நிதிகளை வழங்குதல், திட்டங்களை அமல்படுத்துவதற்கான ஆதாரங்களைத் திரட்டுதல், வங்கிக் கடன் மற்றும் சர்வதேச நிதி சம்பந்தமான சட்டங்களை இயற்றுதல் பற்றிய ஆலோசனைகளை அரசுக்கு வழங்குகிறது.

**பொருளாதார அளவுருக்களை கூர்ந்து கண்காணித்தல்:-** பொருளாதாரத்தின் பரந்த அளவுருக்கான வேலைவாய்ப்பு நிலை, விலைவாசி அளவுகள் மற்றும் உற்பத்தி அளவு, வர்த்தக சுழற்சிகள், அயல்நாடுகளின் முதலீட்டு உள்ளீடுகள் மற்றும் செலுத்தல் சமநிலை போன்றவைகளை இந்திய ரிசர்வ் வங்கி கூர்ந்து கண்காணித்துப் பொருளாதார உறுதித்தன்மை மற்றும் வளர்ச்சியை அடைவதற்கு உதவுகிறது. இந்திய ரிசர்வ் வங்கியின் நிதி மேற்பார்வை



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

வல்லுநர்குழு, குறைந்த பட்சம் மாதத்திற்கு ஒரு முறையாவது (சில சமயம் ஒவ்வொரு நாளிலும்) கூடி, நாடு முழுவதும் நடப்பு நிகழ்வுகள் அனைத்தையும் கவனமாகக் கண்காணித்து முடிவெடுக்கிறது.

**புதிய சவால்களுக்கு உடனடியாகப் பதிலளிப்பது:-** இந்திய வங்கி அமைப்புக்கு எதிராக எப்பொழுதெல்லாம் புதிய சவால்கள் எழுந்தாலும், இந்திய ரிசர்வ் வங்கி உடனடியாக ஒரு குழுவினை ஏற்படுத்தி, ஆய்வு செய்தல் மற்றும் தலைமை சுற்றறிக்கைகளை வெளியிடுதல் போன்ற பணிகளை மேற்கொண்டு, இந்திய வங்கிகளை வலுப்படுத்துகிறது. ரிசர்வ் வங்கியின் சுற்றறிக்கைகள் மற்றும் வல்லுநர் குழு அறிக்கைகளில், வளம் சேர்க்கும் பல தகவல்களைக் காணலாம்.

**42.அ) சிறுகுறிப்பு வரைக:-**

**பகுப்பாய்வு உற்பத்தித் தொழில்:-** ஒரு மூலப் பொருளிலிருந்து பல்வேறு வகையான பொருட்களைப் பகுத்து ஆராய்ந்து பிரித்தெடுக்கும் தொழிற்சாலை ஆராய்ச்சித் தொழிற்சாலை ஆகும். எகா:- எண்ணெய் சுத்திகரிக்கும் தொழிற்சாலையில், கச்சா எண்ணையிலிருந்து எரிவாயு, பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றை பிரித்தல்.

**மரபுசார் உற்பத்தித் தொழில்:-** நுகர்வோரின் உபயோகத்திற்காக சில தாவரங்களும், மிருகங்களும் வளர்க்கப்படுகின்ற தொழிற்சாலையே மரபுசார் தொழிற்சாலை எனப்படும். எகா:- கால்நடைகள் வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, ரப்பர் மரம் வளர்ப்பு, காடு வளர்ப்பு

**கட்டுமானத் தொழில்கள்:-** கட்டிடங்கள், பாலங்கள், சாலைகள் மற்றும் அணைகள் போன்றவற்றைக் கட்டத் தேவையான பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையே கட்டுமானத் தொழிற்சாலை எனப்படுகிறது.

**42.ஆ) பல்வேறு வகையான பண்டகக் காப்பகங்கள்**

**உரிமையின் அடிப்படையில்:-** இவ்வகை பண்டகசாலைகள் தனியார் தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள், அவை உற்பத்தி செய்யும் பொருட்களைச் சேமிப்பதற்காக உருவாக்கப்படுபவை. இவை அவற்றின் சொந்த பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்தப்படுகின்றது.

**அரசு பண்டக சாலைகள்:-** அரசின் திட்டங்களை அமுல்படுத்துவதற்காக, அரசு இந்த பண்டக சாலைகளை உருவாக்கி நடத்தி வருகிறது. இதன் சேவைகள் பெரும்பாலும் அரசு துறைகளுக்கு மட்டுமே கிடைக்கின்றன.

**பொதுப் பண்டகசாலைகள்:-** இது பெரிய அளவில் பொதுமக்களுக்காக ஏற்படுத்தப்பட்டது. சிறிய மற்றும் நடுத்தர வணிக நிறுவனங்கள், பெரிய அளவிலான பண்டகசாலைகளை சொந்தமாக அமைக்க முடியாது. அவர்கள் இம்மாதிரியான பண்டகசாலையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**கூட்டுறவு பண்டக சாலைகள்:-** இந்த பண்டக காப்பகத்தை ஏற்படுத்தி, நிர்வகிக்கும் பொறுப்பை கூட்டுறவு சங்கங்கள் அல்லது விவசாயக் கூட்டுறவு சங்கங்கள் மேற்கொள்கின்றன.

**பிணையகாப்பு பண்டகசாலைகள்:-** இவ்வகை பண்டகசாலைகள், அரசிடம் உரிமம் பெற்று இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகளை சுங்கவரி செலுத்தும் வரை பண்டக காப்பகத்தில் வைத்திருக்க பயன்படுகின்றன.

**நிறுவன முறை பண்டகசாலைகள்:-** ஒவ்வொரு நிறுவனமும் செய்யும் வேலையின் தன்மையைப் பொறுத்து அந்நிறுவனங்கள் பண்டக சாலைகளை வைத்திருக்கின்றன.

**விநியோக மையப் பண்டகசாலைகள்:-** தற்காலிகமாக சரக்குகளை ஒன்று அல்லது இரண்டு நாட்கள் வைப்பதற்கும் அங்கிருந்து சரக்குகளை பகிர்ந்தளிக்கவும், இவ்வகை பண்டக சாலைகள் பயன்படுகின்றன.

**பண்டங்களின் அடிப்படையில்:-**

**பொதுப் பண்டகசாலைகள்:-** இது உலர்ந்த தானியங்கள், உரங்கள், முதலியவற்றை பேரளவில் சேமித்து வைப்பதற்கான ஒரு பயனுள்ள பொதுப் பண்டக சாலை ஆகும்.

**சிறப்பு பொருள் பண்டகசாலைகள்:-** புகையிலை, பருத்தி, கம்பளி போன்ற குறிப்பிட்ட வகை பொருட்களை பாதுகாப்பதற்காக இவை வடிவமைக்கப்பட்டுள்ளன.

**குளிர்பதன பண்டகசாலைகள் அல்லது குளிரூட்டப்பட்ட கிடங்குகள்:-** பொருட்கள் குளிரூட்டப்பட்ட கொள்கலன்களில் கொண்டு செல்லப்படுகின்றன மற்றும் குளிரூட்டப்பட்ட பண்டக சாலைகளில் சேமிக்கப்படுகின்றன. பழங்கள், காய்கறிகள், முட்டை, வெண்ணெய், மீன் மற்றும் இறைச்சி போன்ற விரைவில் அழுகக் கூடிய பொருட்களை சேமித்து வைப்பதற்காக இந்த பண்டகசாலைகள் பயன்படுத்தப்படுகின்றன. சரியான நேரத்தில் குளிரூட்டப்பட்டு சேமிக்கப்படும் பொருட்கள், ஆண்டு முழுவதும் கிடைக்க வழிவகை செய்யப்படுகிறது.

**தட்பவெப்பநிலை கட்டுப்பாட்டு பண்டகசாலைகள்:-** தட்பவெப்பநிலை கட்டுப்பாட்டில் உள்ள பண்டக காப்பகங்கள், பழங்கள் மற்றும் காய்கறிகளின் வளர்சிதை மாற்றத்தை குறைக்க பயன்படுகின்றன.



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**தானியங்கி பண்டக சாலை:-** ஒரே நேரத்தில் பல நூறு கிலோ எடையுள்ள சரக்குகளை கையாளக்கூடிய திறன் கொண்ட வசதிகள் இங்கு உண்டு. இதற்கு பெரிய முதலீடு, நவீன தொழில் நுட்பம் மற்றும் பெரிய அளவு சுழற்சி உள்ள பொருட்கள், நிறுவனத்தில் இருக்க வேண்டும்.

**43.அ)கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கம்**

கூட்டாண்மையின் பெயர்
நிறுவனம் மேற்கொண்டிருக்கும் தொழிலின் தன்மை
கூட்டாண்மையின் காலவரையறை
கூட்டாளிகள் வழங்கும் மூலதனத் தொகை
கூட்டாண்மையிலிருந்து எடுக்கும் தொகை
இலாப நட்டம் பகிர்வு விகிதம்
மூலதனத்தின் மீது வட்டி
எடுப்புத் தொகை மீதான வட்டி வீதம்
கூட்டாளிகள் தரும் கடன்
கணக்கு வைப்பு
கூட்டாளிகளின் சம்பளம் மற்றும் கழிவு

**43.ஆ) தொடர்வண்டி போக்குவரத்தின் நன்மைகள்:**

உற்பத்தி திறனை அதிகரிக்கிறது.
அதிகமான பொருட்களுக்கான தேவை மற்றும் பல்வேறு நுகர்வுப் பொருள்களின் தேவையைத் தூண்டுகிறது.
சந்தையை மேம்படுத்துகிறது மற்றும் வளர்ந்து விரிவடையச் செய்கிறது.
இது நாடு முழுவதும் பொருட்களை விநியோகிப்பதன் மூலம் விலை உறுதிப்பாட்டிற்கு உதவுகிறது.
இது பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகிறது.
இது விசேப்படுத்தி அதிக அளவு உற்பத்திக்கு உதவுகிறது.
உற்பத்தி, தயாரிப்பு மற்றும் வடிவமைப்பில் புதுமைகளை ஊக்குவிக்கிறது.

**44.அ) செயல்முறை விதிகளில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள்**

பங்குகள், பங்கு மூலதனம், பங்குகளின் மதிப்பு மற்றும் பங்குகளின் வகைகள்.
ஒவ்வொரு வகை பங்குநர்களின் உரிமைகள் அதாவது ஓட்டுரிமை, பங்காதாயம், பங்கு முதலை திரும்பப் பெறுதல் போன்றவை.
பங்குகள் மற்றும் கடனீட்டுப்பத்திரங்கள் வெளியீடு தொடர்பான விதிகள்.
பங்குகள் மீதான அழைப்புப் பணத்தை செலுத்த அழைப்பு விடுத்தல் தொடர்பான விதிமுறைகள்.
பங்கு மாற்றம் குறித்த விதிகள்.
பங்காதாயம் அறிவித்தல்.
நிறுமத்தின் கடன் வாங்கும் அதிகாரம்.
இயக்குநர்களின் நியமனம், ஊதியம் மற்றும் நீக்கம்.
கூட்டங்கள் நடத்துதல், பகராள், குறைவெண் போன்றவை தொடர்பான நடைமுறைகள்
நிறுமத்தின் கணக்கு வைப்பு மற்றும் தணிக்கை தொடர்பான நடைமுறைகள்.
நிறுமத்தின் பொது முத்திரை.
நிறுமக் கலைப்புத் தொடர்பான நடைமுறைகள்.

**44.ஆ) காப்பீட்டின் கோட்பாடுகள்:**

**மிக்க நம்பிக்கை:-** இக்கோட்பாட்டின் படி காப்பீடு தருநர் மற்றும் காப்பீடு பெறுநர் மிக்க நம்பிக்கை அடிப்படையில் ஒப்பந்தத்தில் ஈடுபடுகின்றனர். காப்பீடு பெறுநர், கருப்பொருள் பற்றிய அனைத்து உண்மைகளையும் காப்பீடு தருநருக்கும், காப்பீடு தருநர், காப்பீட்டு ஒப்பந்தம் குறித்த அனைத்து தகவல்களையும் காப்பீடு பெறுநருக்கும் தெரிவித்து விட வேண்டும்.

**காப்பீடு பெறுநலன்:-** காப்பீடு பெறுநலன் என்பது காப்பீடு செய்யப்படும் கருப்பொருள் மீது நிதி சார்ந்த அக்கறை இருத்தலைக் குறிக்கிறது. காப்பீடு பெறுநருக்கு, காப்பீடு செய்யப்படும் கருப்பொருள் மீது, காப்பீடு பெறுநலன் இருக்க வேண்டும்.

**ஈட்டுறுதி:-** ஒருவருக்கு ஏற்பட்ட உண்மையான நட்டத்தை ஈடு செய்வதே ஈட்டுறுதியாகும். காப்பீடு பெறுநருக்கு உண்மையில் எவ்வளவு இழப்பு ஏற்பட்டதோ, அந்த இழப்புக்கு ஈடான தொகை மட்டுமே இழப்பீடாக அளிக்க வேண்டும். இழப்பை விட கூடுதலான தொகை வழங்கப்படாது.

**அண்மைக் காரணம்:-** ஒரு இழப்பு ஏற்பட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காரணங்கள் இருப்பின், அதற்குரிய அண்மைக் காரணம் எதுவென காண வேண்டியதைப் பற்றி குறிப்பிடுவது இக்கோட்பாடு ஆகும். காப்பீட்டு ஒப்பந்தத்தின் போது இடர் ஏற்படுவதற்கான காரணங்கள் என்று, காப்பீடு பெறுநர் கூறிய காரணங்களில் அண்மைக் காரணம் இடம் பெற்றிருந்தால் மட்டுமே, காப்பீடு தருநர் இழப்பீடு வழங்குவார்.

**பகிர்ந்தளித்தல்:-** ஒரே கருப்பொருள் ஒன்றுக்கு மேற்பட்ட காப்பீட்டு நிறுவனங்களிடம் காப்பீடு செய்யப்பட்டிருப்பின் அதற்கு "இரட்டைக் காப்பீடு" என்று பெயர். காப்பீடு பெறுநருக்கு ஏற்படும் இழப்பினை சம்பந்தப்பட்ட காப்பீட்டு நிறுவனங்கள், அவரவர் செய்திருக்கின்ற காப்பீட்டு ஒப்பந்த தொகைக்கு ஏற்ப விகிதாச்சார அடிப்படையில் அவரவர்களுக்குள்ள பங்கினை பகிர்ந்து அளித்தல் வேண்டும்.

**பகர உரிமை:-** பகர உரிமை என்பது, ஒருவருக்கு ஏற்பட்ட இழப்பை, காப்பீடு தருநர் ஈடு செய்தபின், காப்பீடு பெறுநர் தனக்குள்ள உரிமைகளை காப்பீடு தருநருக்கு மாற்றிக் கொடுப்பது ஆகும்.



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

காப்பீடு பெறுநர் தனக்கு ஏற்பட்ட உண்மையான இழப்பைக் காட்டிலும் கூடுதலாக ஆதாயம் அடைந்து விடக் கூடாது.

அப்படி இலாபம் அடைந்தால், அது ஈட்டுறுதிக் கோட்பாடுக்கு எதிராக அமைந்துவிடும்.

**45.அ) கூட்டுறவின் கொள்கைகள் (ஏதேனும் 5)**

**தன்னார்வ மற்றும் உறுப்பினராவதற்குத் தடையில்லா வாய்ப்பு:-** கூட்டுறவு என்பது தன்னார்வ அமைப்புகளாகும். இதன் சேவைகளைப் பாலினம், சமூக, இன, அரசியல், அல்லது மத பாகுபாடு இல்லாமல் அனைவரும் பெற்று பயன் அடையலாம்.

**மக்களாட்சி முறையில் உறுப்பினர் கட்டுப்பாடு:-** கூட்டுறவு மக்களாட்சி முறையில் அதன் உறுப்பினர்களால் கட்டுப்படுத்தப்படுகிறது. உறுப்பினர்கள் கூட்டுறவின் சேவைகளைப் பயன்படுத்துவதிலும், கொள்கைகளை அமைப்பதிலும் முடிவுகளை எடுப்பதிலும் தீவிரமாக தங்களை ஈடுபடுத்திக் கொள்கிறார்கள்.

**உறுப்பினர்களின் பொருளாதார பங்களிப்பு:-** உறுப்பினர்கள் கூட்டுறவு மூலதனத்தை சமமாகவும், ஜனநாயக முறையிலும் பங்களித்து கட்டுப்படுத்துகின்றனர். இந்த நன்மைகள் உறுப்பினர்கள் மூலதனத்தில் முதலீடு செய்வதை விட, ஒத்துழைப்புடன் நடத்தும் வியாபார விகிதத்தில் இருக்கும்.

**கல்வி, பயிற்சி மற்றும் தகவல்:-** உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், மேலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கான கல்வி மற்றும் பயிற்சியளிப்பை கூட்டுறவில் வழங்குகிறார்கள். அவர்கள், கூட்டுறவுகளின் இயல்பு மற்றும் நன்மைகளைப் பற்றி பொது மக்களுக்கு தெரிவிக்கின்றனர்.

**கூட்டுறவுகளுக்கிடையே கூட்டுறவு:-** கூட்டுறவு உறுப்பினர்கள், தங்கள் உறுப்பினர்களை மிகவும் திறமையாகவும், உள்ளூர் தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச கட்டமைப்புகள் மூலம் ஒன்றாக இணைந்து கூட்டுறவு இயக்கத்தை பலப்படுத்தவும் செய்கின்றனர்.

**சமூகத்திற்கான கவலை:-** கூட்டுறவில் உறுப்பினர் தேவைகளைப் பூர்த்தி செய்யும் போது, உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ளும் கொள்கைகள் மற்றும் திட்டங்களின் மூலம் சமூகங்களின் நிலையான அபிவிருத்திக்காக கூட்டுறவு சங்கங்கள் செயல்படுகின்றன.

| 45 ஆ அடிப்படை | உற்பத்தித் தொழில் | வணிகம் | வியாபாரம் |
|---|---|---|---|
| பொருள் | பிரித்து எடுத்தல், மறு உற்பத்தி, மாற்றுதல் பயனுள்ள பொருட்களை தயாரித்தல் போன்ற செயல்களைக் குறிக்கின்றது. | பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குதலைக் குறிக்கின்றது. | பொருட்கள் மற்றும் சேவைகள், கொள்முதல் மற்றும் விற்பனையைக் குறிக்கின்றது. |
| உள்ளடக்கம் | கச்சா பொருட்கள், பகுதியாக முடிவு பெற்ற பொருட்களை முழு இறுதிப் பொருளாக மாற்றும் அனைத்து நடவடிக்கைகளையும் உள்ளடக்கியது. | வியாபாரம் மற்றும் அதன் தொடர்புடைய வற்றை உள்ளடக்கியது. | பொருட்கள் மற்றும் சேவை பரிமாற்றம் உள்ளடக்கியது. |
| முதல் | அதிக முதலீடு தேவை | குறைந்தளவு முதலீடே தேவை | போதுமான சரக்கிருப்பை வைத்திருக்கவும், கடன் அளிக்கவும் தேவையான முதல் தேவை. |
| இடர்பாடு | அதிக இடர்பாடு கொண்டது | குறைவான இடர்பாட்டைக் கொண்டது. | குறைவான இடர்பாட்டைக் கொண்டது. |
| பரிமாணம் | பொருட்கள் மற்றும் சேவையின் வழங்கல் அளிப்பு பக்கத்தைப் பிரதிபலிக்கிறது. | பொருட்கள் மற்றும் சேவையில், தேவை பக்கத்தைப் பிரதிபலிக்கிறது. | இது அளிப்பு மற்றும் தேவை பக்கத்தைப் பிரதிபலிக்கிறது. |

**46.அ) பன்னாட்டு நிறுவனத்தின் தீமைகளை விவரி.**

**உள்ளூர்த் தொழில்களுக்கு அபாயம்:-** இதன் மிகப்பெரிய பொருளாதாரச் சக்தி, உள்நாட்டுத் தொழில்களின் முன்னேற்றத்திற்கு தடையை ஏற்படுத்துகிறது. பல உள்நாட்டு நிறுவனங்கள், இவைகளால் அழிக்கப்படுகின்றன. நாட்டிற்குப் பொருளாதார வளர்ச்சியைத் தருவது போன்று தோற்றமளித்து, உள்ளூர் தொழில்களை அழிக்கின்றன. இச்செயல், “பசுத்தோல் போர்த்திய புலி” என்ற பழமொழியை நமக்கு ஞாபகப்படுத்துகின்றன.

**வழக்கொழிந்த தொழில் நுட்பத்தை மாற்றுதல்:-** வழக்கொழிந்த தொழில் நுட்பத்தை, வளரும் நாடுகளுக்கு மாற்றுவதன் மூலம் நாடுகளில் தொழில் முன்னேற்றம் ஏற்படும் என்ற வாதம் தவறானவை.



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**ஏழை மக்களுக்கு நன்மையில்லை:-** பணக்காரர்களால் மட்டுமே இந்நிறுவனங்களின் பொருட்களை வாங்க முடியும். ஏழை மக்களுக்கு இந்நிறுவனங்களால் எப்பயனும் இல்லை.

**உள்நாட்டு மக்களுக்கு வேலைவாய்ப்பு இழப்பு:-** உள்நாட்டு மக்களுக்காக கணிசமான அளவில் வேலை வாய்ப்பினை, பன்னாட்டு நிறுவனங்கள் உருவாக்கி தருவது இல்லை.

**உள்நாட்டுத் தொழில் மற்றும் பொருளாதார முன்னேற்றம் புறக்கணிப்பு:-** உள்நாட்டு முதலீட்டினால் பன்னாட்டு நிறுவனங்கள் அதிக இலாபம் ஈட்டினாலும், உள்நாட்டுத் தொழில் மற்றும் பொருளாதார முன்னேற்றம் ஏற்படுவதை இவை புறக்கணிக்கின்றன.

| 46 ஆ) பண்டக சான்றாணை | பண்டக காப்பாளர் இரசீது |
|---|---|
| உரிமை மாற்றத்தை ஏற்படுத்தும் ஆவணம் | உரிமை மாற்றத்தை ஏற்படுத்தும் ஆவணம் அல்ல. |
| மற்றவர்களுக்கு இதை மாற்ற இயலும் | இதை மாற்றித்தர இயலாது |
| இதை பிணையமாக வைக்க முடியும். | இதை பிணையமாக வைக்க முடியாது. |
| சரக்கை பெற்றுக் கொண்டதற்கான ஒரு அத்தாட்சி மற்றும் சரக்கைப் பெறுவதற்கான அதிகாரத்தை தரும் ஆவணம் ஆகும். | சரக்கை பெற்றுக் கொண்டதற்கான ஒரு அத்தாட்சி ஆகும். |
| பண்டக சான்றாணையை மேலெழுதி கொடுப்பதன் மூலம் பொருட்களை பண்டக காப்பிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். | இந்த இரசீதையும், பொருட்களின் உரிமையாளர் கடிதத்தையும் இணைத்தால் மட்டுமே பொருட்களை பெற்றுக் கொள்ள முடியும். |

**47.அ) துறைவாரி நிறுவனங்களின் நன்மைகள்**

**எளிமையான அமைப்பு:-** இதனை அமைப்பது எளிது, இவ்வமைப்புகளை நிர்வாக முடிவு எடுத்து அரசு அமைப்பது எளிய முறையாகும்.

**பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தின் நேரடிக் கட்டுப்பாடு:-** இதனை, பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தின் மூலம் மட்டுமே நேரடியாக கட்டுப்படுத்தப்படும். அத்துறை அமைச்சரே இதற்கு பொறுப்பாவார்.

**இரகசியம் காத்தல்:-** பாதுகாப்பு மற்றும் அணுசக்தி துறைகள் போன்றவைகள் அரசுத்துறைகளின் கட்டுப்பாட்டில் தான் இருக்க வேண்டும். அப்போது தான் அத்துறைகளில் பணியாளர்கள் தங்களது பணிகள், கொள்கைகள் மற்றும் செயல்பாட்டினைப் பற்றிய இரகசியங்களைப் பாதுகாத்து வைக்க முடியும்.

**பொது மக்களுக்கு வரிச்சுமை குறைவு:-** இத்தொழில் நிறுவனங்கள், தங்களது வருமானத்தை அரசுக் கருவூலங்கள் மூலம் செலுத்தப்படுவதால் பொது மக்களுக்கு குறைந்த வரியே விதிக்கப்படும்.

**சமூக மாற்றத்திற்கான கருவி:-** அரசாங்கம் பொருளாதார மற்றும் சமூக நீதியை அரசுத் துறை நிறுவனங்கள் மூலமே சிறப்பாக செயல்படுத்த முடியும். ஆகவே, அரசாங்கம் சமூக மாற்றத்தை ஏற்படுத்த துறை நிறுவனங்களை கருவியாக பயன்படுத்துகின்றன.

| 47 ஆ அடிப்படைகள் | உலகளாவிய வைப்பு இரசீது | அமெரிக்க வைப்பு இரசீது |
|---|---|---|
| மதிப்பிடுதல் | இது எந்த நாட்டுப் பணத்தின் மதிப்பிலும் குறிப்பிடப்படும் | இது அமெரிக்க டாலரில் மட்டுமே குறிப்பிடப்படும். |
| யாருக்கு இது வெளியிடப்படும் | ஒன்று அல்லது அதற்கு மேல் உள்ள சந்தையில் உள்ள முதலீட்டாளருக்கு வெளியிடப்படும். | அமெரிக்க குடிமகனாக உள்ள முதலீட்டாளருக்கு மட்டுமே வெளியிடப்படும். |
| எங்கு பட்டியலிடப்படும் | அமெரிக்கா தவிர்த்த, இதர பங்கு மாற்றகங்கள் | அமெரிக்கப் பங்கு மாற்றகங்களில் மட்டும் பட்டியலிடப்படும். |
| ஒப்புதல் | இதனை வெளியிட, அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டு வாரியத்தின் ஒப்புதல் தேவை இல்லை. | இதனை வெளியிட அமெரிக்கப் பிணையங்கள் மற்றும் மாற்றக இயக்கத்தின் ஒப்புதல் தேவை. |
| வெளியீட்டு வழிமுறை | இவை, பட்டியலிடப்பட்ட முழுமையான எண்ணிக்கை உடைய நேர்மைப் பங்குகளாக வெளியிடப்படும். | இவை, சிறு அலகுகளாக பிரிக்கப்பட்ட நேர்மைப் பங்குகளாக வெளியிடப்படும். |
| மாற்றுகைத் தன்மை | உலகம் முழுவதும் மாற்ற கூடியது. | அமெரிக்காவில் மட்டும் மாற்றதக்கது. |



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593